1978 மார்ச் 2]

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு விற்பனைக் குழு

*360 வினு—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திற்கென தனியாக மார்க்கெட்டிங் கமிட்டி (Market Committee) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை* ஒன்று அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, திருச்சியில் தற்பொழுது இயங்கிக்கொண்டு வருகிற 'மார்க்கெட்டிங் கமிட்டி' யானது, பல்வேறு ஊழல்களுக்கு உதவியிருக்கிற காரணத்தினுல், மேலும் பல்வேறு வசதிகள் புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கிடைக்காத காரணத்தினுல், உடனடியாக இந்த ஆண்டே எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தனியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அமைப்பதற்கான ஆலோசனையை அரசு ஆராய்ந்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கும் அரசினுடைய ஆராய்ச்சியிலே இருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, மார்க்கெட்டிங் கமிட்டியின் விற்பனை விளைபொருள் பட்டியலில் அதிக வருவாய் தருவது நெல்தான். ஆனுல், தமிழ்நாடு உணவு வழங்குபொருள் கழகத்திற்கு விற்கப்படும் நெல்லுக்கு செஸ் வசூலிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அந்தத் தடையை நீக்கி, மீண்டும் செஸ் வசூலிக்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மூலக் கேள்வி புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தனியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைப் பற்றியது. செஸ் பற்றிய கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

---

*362 ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 மார்ச் 2

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, புதுக்கோட்டையும், திருச்சியும் ஒன்ருக இருந்த காரணத்தினுல், அதைப் பிரித்த நேரத்திலே, இந்த மார்க்கெட்டிங் கமிட்டியை புதுக்கோட்டைக் குத் தனியாக அமைக்கிற நேரத்திலே, திருச்சி மாவட்டத்திலே யிருக்கிற மார்க்கெட்டிங் கமிட்டி நல்ல முறையிலே செயல்படாத தனுல், அதையும் மாற்றியமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே இருக்கக்கூடிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இப்பொழுது நல்லமுறையில்தான் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சரியாகச் செயல்படவில்லையென்று சொல்கிருர். அப்படி ஏதாவது புகார்கள் வந்தால், அதைத் தயவுசெய்து அரசுக்கு அனுப்பினுல், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்.

சமூக நலத்துறை அமைச்சருக்குப் பதிலாக வேறு அமைச்சர் கேள்விக்கு பதிலளித்தது குறித்து.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, இன்று சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கேள்விக்கு வேறு அமைச்சர் பதில் அளித்தாரே, அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ஓர் வழக் கறிஞர்; கூட்டுப் பொறுப்பு இருப்பதாலே எந்த அமைச்சரும் பதில் சொல்லலாம். வேறு எந்த காரணமும் இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, நான் பல தடவை உங்களுடைய கவனத்தைக் கவர்வதற்காக கை தூக்கிக் காண்பித்தேன். தகவலைப் பெற வேண்டும் என்ற எண் ணம் எனக்கிருக்கிறது. இருந்தும் தாங்கள் எனக்கு ஓரவஞ்சனை செய்கிறீர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வடார்க்காடு மாவட்டம் என்று வரும்போது திரு. இராமசாமியை விடமாட்டேன். தங்களை ஒட்டிய கேள்வி இல்லை என்பதால் விட்டிருப்பேன். தயவுசெய்து வேண்டுமென்றே தங்களைக் கவனிக்கவில்லை என்று கருதவேண் டாம்.